1992 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 283, திரு. இரா. நடேசன், மாண்புமிகு கல்வியமைச்சர்.

283—

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாடநூல்கள் மலையாளத்தில் கிடைக்க நடவடிக்கை.

*24 திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மலையாள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மாணவர்களுக்குப் பாடநூல்கள் மலையாள மொழியில் கிடைக்காமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1991-92 ஆம் கல்வியாண்டில் மலையாள மொழி நூல்கள் மற்றும் வழி நூல்கள் அனைத்தும் விநியோகிக்கப் பட்டு விட்டன. வெளிமாநிலங்களிலிருந்து, சிறுபான்மை மொழி நூல்கள் பெற்று வருவதில்தான் தாமதமே தவிர, மலையாள மொழி நூல்கள் தட்டுப்பாடு எதுவும் இல்லை.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மலையாள மொழி பேசுகின்றவர்கள், மலையாள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் சிறுபான்மையாக இருக்கிறார்கள். ஏறக்தாழ 36 வருடங்களுக்கு முன்பாக கன்னியாகுமரி மாவட்டம் கேரளத்தோடு சேர்ந்திருந்தது. அன்று இருந்த மலையாளிகள் குடும்பத்தைச் சேர்ந்த சிறுபான்மை ஆட்கள் கொஞ்சம் இங்கே யிருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கு மலையாளப் புத்தகங்கள் கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டு அவர்கள் கேரளா விலேயிருந்து வாங்குகிற நிலைமை இருந்து வருகிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆம் எனில், இனி அவர்களுக்கு ஒழுங்காக மலையாள மொழியில் உள்ள புத்தகங்கள் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலையாள மொழி நூல்கள் மட்டுமல்லாமல், தெலுங்கு, கன்னடம், குஜராத் போன்ற சிறுபான்மை மொழி பேசுகின்றவர்கள் படிக்கின்ற பள்ளி களில் தேவையான நூல்களில் சிலவற்றை நமது தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் மூலம் அச்சடித்து விநியோகிக்கிறோம். சில நூல்களை, அந்தந்த மாநிலங்களிலே எதைப் பயன்படுத்துவார் களோ அந்தப் புத்தகங்களை நாமும் இங்கே கொண்டு வந்து மாணவர்களுக்கு விற்று அதைப் பயன்படுத்துகின்ற ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். குறிப்பாக மலையாள மொழி நூல்களைப் பொறுத்தமட்டில் இந்த ஆண்டு நம்முடைய அலுவலர் அவர்கள் திருவனந்தபுரத்திற்கு இரண்டு, மூன்று முறை போயும், அவர்கள் தராத காரணத்தால் இந்தத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இப் போது நூல்கள் கிடைத்திருக்கின்றன. ஆகவே தந்து கொண்டிருக் கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. ஆனால் கிடைக்காத புத்தகங்களை நமது அச்சகங்களிலே அச்சடித்துக் கொடுப்பதற்கும், மலையாள ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கவும் செய்து அந்தச் சிறுபான்மை மக்களுக்குப் புரட்சித் தலைவியின் ஆட்சியில் உதவி புரிய வேண்டும் என்று சொல்லி அதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.45

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் அச்சடிப்பதில் கஷ்டம் ஒன்றுமில்லை. உயர் வகுப்புகளுக்கான சில புத்தகங் களை உருவாக்குவதில் சில சிரமங்கள் இருக்கின்றன. அதற்குப் பலதரப்பட்ட மலையாள மொழி தெரிந்த ஆசிரியர்களை எல்லாம் அதிலே ஈடுபடுத்தி செய்ய வேண்டும். தமிழ் மொழி நூலுக்கு எவ்வளவு முயற்சி எடுக்கிறோமோ அதேபோல மலை யாளத்திற்கும் எடுக்க வேண்டி வரும். கடைசியிலே பார்க்கப் போனால் அதற்கும் கேரளாவிலே அச்சடிக்கிற நூலுக்கும் அதிக வித்தியாசம் இருக்கப் போவதில்லை என்கிற காரணத் தாலே அதே நூல்களை நாம் இங்கே வைக்கிறோம். நம்முடைய நூல்களையும் மற்ற மாநிலங்களில் வைக்கிறார்கள். ஆகவே, அந்த நூல்களை, நமக்கு நாம் கேட்ட அளவிற்கு நூல் தருவதிலே தாமதம் ஏற்பட்ட காரணத்தினாலேதான் இங்கே மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதை ஒழுங்கு படுத்தி தாமதம் இல்லாமல் கிடைக்க நாம் ஏற்பாடு செய்யலாம். மலையாள மொழி ஆசிரியர்களை நியமிப்பதில் எந்தவிதமான சிரமமும் இல்லை.

1992 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாடநூல் நிறுவனம் என்று அமைச்சர் அவர்கள் கூறியதனால் ஒரு பொதுவான கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அதற்கு அவரிடம் விடை இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இல்லை. பாடநூல் நிறுவனம் என்று சொன்னால் அதுபற்றி எல்லாமே கேட்க முடியாது. இந்தக் கேள்விக்குத் தொடர்புடைய துணை வினாவைக் கேளுங்கள்.

திரு. கே. பி. ராஜூ : பாடநூல் நிறுவனத்திடமிருந்து அச்சடிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்ற புத்தகங்கள் அந்தக் காலக்கெடுவுக்குள் வந்து சேருவது கிடையாது. அதனால், குழந்தைகள் படிப்பு 3 மாதம், 6 மாதம் லேட் ஆகிவிடுகிறது. ஆகவே, அரசு, பாடநூல் நிறுவனத்தில் அச்சடிக்கும் புத்தகங்களை உடனடியாகப் பள்ளிகளுக்கு அனுப்ப முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியிலே இருந்த நிலைமைகளை மனதிலே வைத்துக்கொண்டு, இப்போது சரி பார்க்காமல் மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கிறார் என்று நினைக்கிறேன். இப்போது அந்தக் குறைகளை எல்லாம் நீக்கி விட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 284. திரு. தே. ஜனார்தனன். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

284—

விழுப்புரத்தில் அரசு மகளிர் கலைக்கல்லூரி.

*1813 திரு. தே. ஜனார்தனன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?